செ.வெ.எண்: 83 நாள்:11.02.2018

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, வ.உ.சி மைதானத்தில் நடைபெற்ற "நெல்லை புத்தகத் திருவிழா" 2018 ல் சுமார் ரூ.2 கோடி அளவிற்கு புத்தகங்கள் விற்பனை ஆகியுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் மகிழ்ச்சிப்பட தெரிவித்துள்ளார்.

----

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, வ.உ.சி மைதானத்தில் நடைபெற்ற "நெல்லை புத்தகத் திருவிழா" 2018 -03.02.2018 முதல் தொடங்கி 04.02.2018 அன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கலை நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார்கள். இன்று (11.02.2018) நிறைவு நாள் வரை சுமார் ரூ.2 கோடி அளவில் புத்தகம் விற்பனை ஆகியுள்ளது என நிறைவு நாள் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் 4 ஆண்டுக்கு பிறகு புத்தகத் திருவிழா நடைபெற்றுள்ளது. புத்தகத் திருவிழா- 2018 ல் அனைத்து தரப்பு மக்கள் ஒத்தழைப்புடன் புத்தகத் திருவிழா மிக வெற்றிகரமாக நடைபெற்றது. புத்தகத் திருவிழாவில் 10 லட்சத்திற்கும் அதிகமான புத்தகங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. 2 லட்சத்திற்கு அதிகமான பார்வையாளர்கள் புத்தகத் திருவிழாவில வருகைபுரிந்துள்ளனர். இதில் 40 ஆயிரம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் பங்குபெற்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஊராட்சி மன்றங்களில் உள்ள நூலகத்திற்கு புதிய புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன. புத்தகத் திருவிழா முன்னிட்டு சுத்தம் புத்தகம் தரும் என்ற போட்டியில் 1300 பள்ளிகள் பங்குபெற்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் 21 வட்டங்களாக பிரித்து வட்டாரத்திற்கு 5 பரிசுகள் என மொத்தம் 105 பள்ளிகளுக்கு நினைவு பரிசுகள் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. ஆரம்ப பள்ளிகளுக்கு ரூ.5 ஆயிரம் மதிப்பிலும், நடுநிலை பள்ளிகளுக்கு ரூ.7 ஆயிரம் மதிப்பிலும், மெட்ரிக் பள்ளிகளுக்கு ரூ.10 ஆயிரம் மதிப்பிலும், மேல்நிலை பள்ளி மற்றும் உயர்நிலை பள்ளிகளுக்கு ரூ.12 ஆயிரம் மதிப்பில் ஆக மொத்தம் ரூ.10 லட்சத்திற்கு மேலாக புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் புத்தகத் திருவிழா தொடர்பான போட்டிகள் நடத்தப்பட்டு 100 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இனி வருங்காலங்களில் ஆண்டு தோறும் புத்தகத் திருவிழா பிப்ரவரி, மார்ச் மாதங்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்படும். புத்தகத் திருவிழா- 2018 மிகப் பிரம்மாண்ட முறையில் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் நடைபெற்ற நிறைவு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் புத்தகத் திருவிழா நடைபெற ஆதரவு அளித்த தனியார் நிறுவனங்கள், கலைஞர்கள், NBT INDIA, தொண்டு நிறுவனங்கள் போன்ற அனைத்து தரப்பு பிரதிநிதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கௌரவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, உட்பட அனைத்து அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.